விலை: சதம் 75 ★★

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 கார்த்திகை 12 முஹரம் 29 இதழ் 285

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27-11-81

ரூ. 7 லட்சம் கடத்தல் பொருள் சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்

சென்னை நவ. 25

ஜப்பானிலிருந்து சென்னைவந்த சரக்குக் கப்பலில் கமார் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோத கடத்தல் சாமான்களை சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்தனர்.

வாஷ்லெஸ் கம்கியூலேட்டர்கள் ஜவுளி வகைகள், கமராக்கள், கைக்கடிகாரங்கள், டேப்ரெக்கோடர்கள், இக்கடத்தற் பொருட்களில் காணப்பட்டன. இப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

மிளகாய்விலைகுறையுமா?

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மிளகாயின் குறிக்கப்பட்ட விலை கிலோ 24 ரூபாவிலிருந்து 21 ரூபாவாகக் குறைக்கப்படலாம் இருப்பதாக தமக்குத் தெரிய வந்துள்ளதாக அத்தனலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்பாணத்தில் அரிசி விநியோகிப்பதற்கு கூட்டுறவுச்சங்கங்கள் நெற்சந்தைப் படுத்தும் சபையிடமிருந்து அரிசியைப் பெறமுடியாமலிருக்கிறது என நல்லூர் எம். பி. திரு. எம் சிவசிதம்பரம் தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பதில் அளித்த பிரதி விவசாய அமைச்சர் திரு. பண்டார அனுராதபுரக் நெற்சந்தைப் படுத்தும் சபையிலிருந்து அரிசியைப்பெற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இந்திய விமானத்தை கடத்திய தென் ஆபிரிக்க கூலிப்படைகள்

டர்பன், நவ. 27

செசல்ஸ் நாட்டின் அரசுக்கு எதிரான திடீர்ப் புரட்சி ஒன்றை நடாத்த முயற்சித்த தென் ஆபிரிக்க கூலிப்படைகள் தமது முயற்சி தோல்வியடையவே அங்கிருந்து பம்பாய் புறப்படத் தயாராக இருந்த 'ஏயர் இந்திய போயிங்' விமானத்தை டர்பனுக்கு கடத்தி வந்தனர் என்றும் டர்பனிலுள்ள லூயி போட்டா விமான நிலையத்தில் கடத்தல்காரர்கள் ஆறு பேரும் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாலிஸ்பரியிலிருந்து பம்பாய்க்கு சென்றுகொண்டிருந்த இவ்விமானத்தில் 65 பிரயாணிகளும் 14 சிப்பந்திகளும் இருந்தனர் என்றும் இவர்கள் அனைவரும் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்றும் டர்பன் நகரிலிருந்து பத்திரமாக பம்பாய்க்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

இச்சம்பவத்தின்போது ஒருவர் பலியானார் என்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளையில் செசல்ஸ்

6ம் பக்கம் பார்க்க

மினி பஸ்ஸில் சங்கிலி அறுத்த 2 பேருக்கு 18 மாத சிறை

(யாழ்ப்பாணம்)

மினிபஸ்ஸில் ஒருவரின் சங்கிலியை அறுத்த இருவருக்கு யாழ். நீதிமன்ற நீதவான் ரி. ஜேசுதாசன் தலா 18 மாத சிறைத்தண்டனை விதித்தார்.

பலாலி - யாழ்ப்பாணம் வீதி வழியாக மினிபஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பாலிங்கம் ஞானசேகரன் என்பவர் அணிந்திருந்த 2750 ரூபா பெறுமதியான சங்கிலியை ஓடும் பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பலாலியைச் சேர்ந்த பாலகிங்கம் கணேசன், ஆறுமுகம் கணேசன் ஆகிய இருவரும் அறுத்ததாக யாழ். நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டிருந்தது.

சுன்னாகம் பொலிசாரால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (மா)

கிரிக்கெட் டெஸ்ட் இன்று ஆரம்பம்

(சென்னை)

இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்குமிடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று பம்பாயில் ஆரம்பமாகிறது.

நம்பிக்கை மோசடி புகார்:

சந்தேக நபர் கொழும்பில் கைது

(யாழ்ப்பாணம்)

நம்பிக்கை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் மிருசுவிலைச் சேர்ந்த எம். எக். இராசதாயகம் சாவகச்சேரி நீதவான் சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்

ஆசிரியர் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி மிருசுவிலைச் சேர்ந்த பொன்னுத்துரை கிருஷ்ணபாலசிங்கம் 6000 ரூபா வாங்கி நம்பிக்கை மோசடி செய்ததாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பொலிசார் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

பொலிஸ் சார்ஜன் பிக்னே, கான்ஸ்டபிள் எஸ். தர்மலிங்கம் ஆகியோர் பம்பலப்பிட்டியில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்தனர்.

சந்தேக நபரை 8000 ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார். பிணை எடுக்க எவரும் முன்வராததனால் 82 மார்ச் 1-ந் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். மா

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்

வடபகுதி கருத்தரங்கில் பங்குபற்ற அனுமதிமறுப்பு!

கொழும்பில் கலந்துகொண்டனர்

(யாழ்ப்பாணம்)

தொலிப்பழையில் தொழிற் நிலைகளத்தின் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்ட வடபகுதி ஆசிரியர் சங்க தலைவர் திரு. மு. திருநாவுக்கரசு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்ற காரணத்தினால் திருப்பி அனுப்பப்பட்டார்.

தொலிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இம்மாதம் 26ம் தேதி முதல் 3 நாட்கள் யாழ்ப்பாண மாவட்ட தொழிற் நிலைகளத்தினால் தொழிலாளர் கல்வியும் முகாமைத்துவ பயிற்சியும் என்பதுபற்றி கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு திரு. திருநாவுக்கரசு அழைக்கப்பட்டிருந்தார். இவர் இக்கருத்தரங்கில் பங்குபற்ற சென்றபோது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் கருத்தரங்கில் பங்குபற்ற முடியாது என திருப்பியனுப்பிவிட்டனர்.

அரசாங்க பொதுசேவை தொழிற்சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் திரு. க. நவரத்தினம் செயலாளர் திரு செ. வீரசிங்கம் ஆகியோருக்கும் இப்படியான அழைப்பு

(6-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவித்தல்

30-05-81 வன்செயல்களின்போது எமது ஸ்தாபனம் எரிக்கப்பட்டமையால், றைக்கிளீனுக்காக தந்த உடைகளை இழந்தவர்கள் தயவுசெய்து பற்றுச்சீட்டுக்களை 29-11-81 க்கு முன் எம்மிடம் ஒப்படைக்கவும்

(அரசாங்க நஷ்டஈட்டுக்குழு விசாரணையின் பொருட்டு)

எம். இரத்தினசபாபதி

எம். ஜி. எம். றைக்கிளினேர்ஸ்

1573

கருணாநிதியின் வீட்டில் பொலிஸார் சோதனை

சென்னை, நவ. 26

திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளை மரணம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் தமிழ்நாடு பொலிசார் நேற்று திமுக தலைவர் திரு. மு. கருணாநிதியின் வீட்டை சோதனை யிட்டனர். திமுக கட்சி அலுவலகத்திலும் திருமுரசு வெளியீடும் 'முரசொலி' பத்திரிகை அலுவலகத்திலும் பொலிசார் சோதனையை மேற்கொண்டனர்.

திரு. சுப்பிரமணியபிள்ளை மரணம் குறித்து தவறான தகவல்களை தெரிவித்தமைக்காக செய்தி அறிவிப்புத் துறை அமைச்சர் திரு ஆர் எம். வீரப்பன் தமது பதவியை ராஜினாமா செய்யவேண்டுமென்று திமுக தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று முன்தினம் தமிழ்நாடு சட்டசபையில் கூறியிருந்தது தெரிந்ததே. (பி)

எம், ஜி. ஆர். ராஜினாமா செய்யவேண்டும்

சென்னை, நவ 26

எதிர்க்கட்சித்தலைவர் என்ற ரீதியில் எனது கடமையின் நிமித்தமே திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தா மரணம் தொடர்பான 'பாக்' கமிஷன் அறிக்கையை வெளியிட்டேன். இந்நிலையில் தமது கடமையைச் செய்யத் தவறிய தமிழக அரசு எனது இல்லத்தையும் கட்சித்தலைமை அலுவலகத்தையும் கட்சிப்பத்திரிகை அலுவலகத்தையும் சோதனையிட்டுள்ளது. எனவே இச்செயலுக்காக முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யவேண்டும்.

இவ்வாறு திமுக தலைவர் திரு மு. கருணாநிதி தெரிவித்தார்.

திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தா மரணம் தொடர்பான விசாரணைக் கமிஷன் அறிக்கையின்படி செயல்படுவதைத் தடுத்து வழிவகுக்கும் நோக்குடன் ஏனை இடத்தையும் மற்றைய இடங்களையும் பொலிசார் சோதனை செய்கிறார்கள் எனக் கமிஷன் [பழிவாங்கும் செயலாகும் என்றும் திரு. கரு

(6ம் பக்கம் பார்க்க)

சேர். பொன் இராமநாதனுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சேர். பொன் இராமநாதன் நினைவுதினத்தை முன்னிட்டு யாழ் மாநகர முன்றலில் அமைந்துள்ள அவரின் சிலைக்கு நேற்றுப் பிற்பகல் யாழ் மாநகர முதல்வர் திரு. இரட்ணராஜா விசுவநாதன் மாலை அணிவித்து அஞ்சலி செய்தார்.

மாநகர உறுப்பினர்களான திருமதி அந்தோனியா சுவாமிநாதனுக்குபுத்தம்மாலை சூட்டினார். ஜனாப் மொஹிதீன் பிச்சை ஆகியோர்பொன் இராம

(6-ம் பக்கம் பார்க்க)

பின்னுறுதிக்கட்டளை
பற்றிய
அறிவித்தல்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பிஐயரின் மரண சாசனம் அற்ற சொத்துக்களின் நிர்வாகத் தத்துவப் பத்திர விடயத்தில்

மரணமெய்தியவர்.

மரணசாதன] இல. T/44
தத்துவம்]

தம்பிஐயர் வைரவேல் புவனேஸ்வரி தங்கோடை, காரைநகர்.

மனுதாரர்

மேற்படி நீதிமன்றத்தில் மேற்குறித்த இலக்கமிடப்பட்ட மரணச்சொத்து நிர்வாகத் தத்துவ வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப்பத்திரம்பெற மேற்குறித்த மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக்கட்டளை மதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981ம் ஆண்டு மார்கழி மாதம் 11ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி மேற்குறித்த பின்னுறுதிக்கட்டளை பூரண கட்டளையாகப் படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இந்தாள் தேவைப்படுத்தப்படுகிறார்.

1981ம் ஆண்டு ஐப்பசி மாதம் 29ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
அ சிறில்
பதிவாளர்.

தயாரித்தவர்
அ மரியாம்பிள்ளை,
மனுதாரரின் சட்டத்தரணி.
1562

பின்னுறுதிக் கட்டளை
பற்றிய
அறிவித்தல்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

நாரந்தனை யூபிலி சவுன் வீதி சேர்ந்த அலன்பகீர் பிலிப் அவர்களின் மரணசாதனம் அற்ற சொத்துக்களின் நிர்வாகத் தத்துவப்பத்திர விடயத்தில்

மரணமெய்தியவர்.

மரணசாதன] இல. /43
தத்துவ வழக்கு]

பிருஷ்டி மேரி திரேசா டெபிரி சைமன் நாரந்தனை மத்தி, ஊர்காவற்றுறை.

மனுதாரர்.

மேற்படி நீதிமன்றத்தில் மேற்குறித்த இலக்கமிடப்பட்ட மரணச் சொத்து நிர்வாகத் தத்துவ வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப்பத்திரம்பெற மேற்குறித்த மனுதாரரால் தாக்கல்செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக்கட்டளை மதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981ம் ஆண்டு மார்கழி மாதம் 11-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி கவ்வாறு பதிவிடப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் பூரணக்கட்டளையாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இந்தாள் தேவைப்படுத்தப்படுகிறார்.

1981ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
அ சிறில்,
பதிவாளர்

தயாரித்தவர்:
அ. மரியாம்பிள்ளை,
மனுதாரரின் சட்டத்தரணி
1561

"சண்டித்தனம் இருந்தால் எழும்பு என்றார் எதிரி"
கொலைவழக்கில் மூதாட்டி சாட்சியம்

(புலோலி நிருபர் நிருபர் செல்வம்)

"செல்லன் நித்திரையாக இருந்த இடத்திற்கு கத்தியுடன் வந்த எதிரி செல்லனை வெட்டிய பின் 'செல்லன் சண்டித்தனமிருந்தால் இனி எழும்பு" என்று கூறினார். நான் ஐயோ ஐயோ என்று குளறினேன்.

இவ்வாறு குருவிச்சேல்லன் கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த குருவிச்சேல்லனின் தாயார் இன்னாள் தெய்வானை (வயது 70) சாட்சியமளிக்கையில் கூறினார்.

இன்னாள் செல்லன் (குருவிச்சேல்லன் என்பவரை எதிரியான வெட்டுக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டிய பருத்தித்துறைப் பொலிசார் அவரையாகச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வல்லிபுரம் என்பவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வே. எஸ் மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

தொடர்ந்து சாட்சியமளித்த தெய்வானை குறிப்பிட்டதாவது:

எதிரியையும் தெரியும்

"இறந்தவர் எனது மகன். அவர் திருமணம் செய்யாதவர். அவர் இறக்கும் வரையும் எனுடனேயே வசித்து வந்தார். இந்த எதிரியை எனக்குத் தெரியும் இவரது பெயர் கணபதிப்பிள்ளை வல்லிபுரம் எதிரியின் வீடு எங்ள் வீட்டிலிருந்து சுமார் 100 யார் தூரத்திலுள்ளது

"இறந்தவர் கூலி வேலையே செய்துவந்தார் சில வருடங்களுக்கு முன்னர் எதிரியின் வீட்டில் நடந்த களவுச் சம்பவத்தில் இறந்தவராகிய செல்லனைச் சந்தேகித்த காரணத்தின் செல்லன் களவைச் செய்யவில்லை என்று அறிந்ததும் அந்தக் களவைச் செய்தவனைக் காட்டித்தா என்று வல்லிபுரம் இறந்த செல்லனைக் கேட்டும் செல்லன் காட்டிக்கொடுக்காததாலும் கூறி தொடர்ந்தும் செல்லனுக்கும் எதிரிக்கும் கோபம் இருந்துவந்தது

படம்பார்க்க சென்றனர்

"சம்பவதினமே இராசரதினம் என்பதனை எனக்குத் தெரியும். கடந்த ஐப்பசி மாதம் 9ந் திகதி இராசரதினம் பிற்பகல் 5 மணிபோல் வீட்டிற்கு வந்த செல்லனையும் கட்டிக்கொண்டு புலோலியிலிருக்கும் தியேட்டருக்குப் படம் பார்க்கச் சென்றார்கள்

"பின்னர் இரவு 10 மணியளவில் இருவரும் வீட்டிற்கு வந்தார்கள். எனது மகன் தனக்கு வல்லிபுரம் என்பவர் படம் பார்க்கப் போனபோது அடித்ததாகவும் அதனால் பயந்து திரும்பிவரும்போது இராசரதினத்தை வீடுவரை கூட்டி வந்ததாகவும் சொன்னார்.

'செல்லன் திரும்பியவுடனே ஒப்பந்த படியிருந்தான் அவரைக் கட்டிவந்த என்னிடம் ஒப்படைத்துவிட்டுப் போவதாக இராசரத்தினம் கூறி, இறந்த செல்லனை ஒப்படைத்துச் சென்றார்.

ஆபத்து என்று கூறினேன்

"நான் செல்லனுக்கு இரவுச் சாப்பாடு கொடுத்தேன் அவர் சாப்பிட்ட பிறகு வீட்டு முற்றத்தில் உள்ள குந்தில் தலையை வைத்துக்கொண்டு படுத்திருந்தார் செல்லன் முற்றத்தில் படுக்கப்போனபோது அவ்படி வெளியில் படுப்பதாகவும் வீட்டிற்குள் படுக்கும்படியும் நான் சொன்னேன். ஆனால் அவர் வெளியில் படுப்பதாகக் கூறினார் சுமார் 10 மணி சொற்ப நேரத்திற்குள் நான் வெளியில் படுக்கப்போவதாகவும் தனக்குப் பக்கத்தில் விளக்கை வைத்துக்கொண்டு நான் எழுந்திருக்கும்வரையும் இருக்கும்படியும் எனக்குச் சொன்னார். நான் அவர் சொல்லியபடி அவரது தலைமாட்டில் விளக்கை வைத்துக் கொண்டிருந்தேன் நேரம் உச்சியில் இருந்தது. அந்த நிலையில் யாரையோ எந்தாள் நன்றாகத் தெரியக் கூடியதாக இருந்தது.

நள்ளிரவு நேரத்தில்

"நள்ளிரவு நேரம் வீட்டுப் படலைக்குளாக எதிரி வல்லிபுரம் சுமார் ஒரு முழ நீளமான வெட்டுக் கத்தியுடன் செல்லன் படுத்திருந்த இடத்தை நோக்கி வந்தார். அவரிடம் இடது கையில் கல் ஒன்றும் இருந்தது. எதிரி கையில் இருந்த கல்லைச் செல்லனுடைய கால் பக்கத்தில் போட்டுவிட்டுத் தன்னுடைய இடது கையால் செல்லனின் வலது கையை அமர்த்திப் பிடித்துக்கொண்டு, கொண்டு வந்த கத்தியால் செல்லனுக்கு வெட்டினார். வெட்டு செல்லனின் கழுத்தையில் விழுந்தது.

பின்னர் இரண்டு கால்களிலும் மாறிமாறி வெட்டினார் அப்படி வெட்டியதன் கத்தியின் ஒரு பக்கத்து அலகில் இருந்த இரத்தத்தை தனது ஒரு கையால் துடைத்து தனது

(5ம் பக்கம் பார்க்க)

பின்னுறுதிக்கட்டளை
பற்றிய
அறிவித்தல்
மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

சங்கானை மேற்கு இலக்கமிடப்பட்ட கொடிகாமம் வடக்கு புனிதமரியின் மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்
கொலையா இலேசன் சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

—மனுதாரர்

தத்துவ நிர்வாகநிர்ணயம்
வழ. இல. T / 98

எதிர்
1. இலேசன் மரிய சிவராணி
2. இலேசன் மரிய வசந்தராணி
3. சிவநேசன் வெகுமாரன் பராயமற்றவர்
4. இலேசன் மரிய ரூபராணி, பராயமற்றவர்
5. விக்கலிங்கம் அந்தோனிமுத்து, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கமிடப்பட்ட மரணசாதனமில்லா மரணச்சொத்து வழக்கு மேற்கட்டளை இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கெனக் பின் முற்றாகும் கட்டளை பதிவிடப்பட்டுள்ளதென இந்தாள் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் 4-ந் திகதி காலை 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன் தோன்றி காரணமிருப்பின் பதிவிடப்பட்ட பின் முற்றாகும் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டலாமென இந்தாள் தேவைப்படுத்தப்படுகிறார்.

1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9-ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்
1595

பின்னுறுதிக்கட்டளை
பற்றிய
அறிவித்தல்
யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

சித்தங்கேணி, காரைநகர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பையா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

தம்பையா கமலாம்பிகை விசாலாட்சி, காரைநகர் வீதி, சித்தங்கேணி

மனுதாரர்

மரணசாதன
நிர்வாகநிர்ணயம் இல. 3628

மேலேயுள்ள இலக்கமிடப்பட்ட மரணசாதனமில்லா மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கெனக் பின் முற்றாகும் கட்டளை பதிவிடப்பட்டுள்ளதென இந்தாள் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆந்நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன் தோன்றி அவ்வாறு பதிவிடப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இந்தாள் தேவைப்படுத்தப்படுகிறார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

1981 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 9 ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

இ. பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணி & பிரசித்த நொத்தாரிசு
52, கவலை வீதி.
யாழ்ப்பாணம்
1564

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

நவீன தளபாடங்களுடன் கூடிய விசாலமான தொடர்மனை (கண்டிடம் தவிர்த்து) பண்டத்தரிப்பு சந்திக்கருகாமையில் விற்பனைக்குள்ளது. கூப்பாடு பார்க்க ஆபீஸ் போகுவதற்கு வசதியானது. கடிதமூலம் தொடர்புகொள்க: கோகிலா வரன், "இந்தியர் களவு" சந்தியோடை சுன்னாகம்.
1551

தேவை

ஆங்கிலத் தட்டெழுத்தும், ஆங்கில அறிவும் தெரிந்த ஒரு வரி வேலைக்குத் தேவை. ஓய்வு நேரம் பெறுபவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க: விளம்பர இல. 1528, C/o ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.
1528

ஆங்கிலத் தட்டெழுத்தும், ஆங்கில அறிவும் தெரிந்த ஒருவர் வேலைக்குத் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தகவல் விபரங்களுடன் விண்ணப்பிக்க: விளம்பர இல. 1560, பெ/பா ஈழநாடு, த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்.
1560

தவறிவிட்டது

24-11-81 இரவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பெரிய ரயிலில் கிளிநொச்சியில் வைத்து முக்கிய தகவல் வேலூர்க் கோட்டை சூரி சேல் தவறிவிட்டது. தஸ்தாவேஜுகள் சம்பந்தமாக மாத்திரம் தகவல் தருபவர்களுக்கு அல்லது எனிடம் ஒப்படைப்பவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். கனிக் பதிவாளர், இறிறி பேக்கரி, (City Bakery) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
1567

சேவை

மாவட்ட சேவைத் திணைக்களத்தில் கீழ் ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்களுக்கு ஒரு தொகை ஒட்டிய எல்லப்பமும் ரூ. 3/- கொண்ட தபால் கட்டண அறவிடு தபால் 2 ஆகு முன்னர் பெற்றுக் கொள்ளலாம். வ. திரவியராசன், செயலாளர், மாதகல்.
1568

லேத் வேலையாள்
உடன் தேவை

நீர் இறைக்கும் பம்புகள் கொண்ட மண்ணெண்ணெய்/மிதிசாரம் முதலியவற்றிற் கேற்செய்யும் இயந்திரங்களுக்கு பூட்டுவதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. எதிர்பார்க்கும் ஊதியத்தைக் குறித்து எழுத்துமூலம் உடனே விண்ணப்பிக்கவும்

484, ஆஸ்பத்திரி வீதி ... யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண அக்கடமி
க. பொ. த. உயர்தர பரீட்சை
ஆகஸ்ட் 1982
மீட்டல் வகுப்புக்கள்

வகுப்புக்கள் வரும் மாதம் புதுத்தவணை ஆரம்பமாகின்றன பாடத்திட்டம் முழுமை மீட்டல் செய்யப்படும் சேர விரும்புவோர் டிசம்பர் மாத முதற் கிழமையில் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

அதிபர்

தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
சுன்டுக்குளி, யாழ்ப்பாணம்
1503

மணிவாக்கு

வளவனாயினு மளவறிந் தளித்துண்

— ஔவையார்

நமது நோக்கு

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் அவசிய தேவை

'மரவள்ளித் தோட்டமென்று, ஒரு காலத்தில் சொல்லப்பட்ட இடத்திலேயே இன்று யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி வளர்ச்சியையும் காண்கிறது.

ஒரு பெரிய பிரதேசத்தின் தலைநகரின் மத்தியில் விற்றிருக்கும் இப்பிரமாண்டமான ஸ்தாபனம் மிகக் குறுகிய காலத்திலே பெருகி விருத்தியடைந்திருப்பது பொதுமக்கள் அறிந்த விடயம்.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் மருத்துவக் கல்வி பயிற்றும் பணியில் முன்னேறிவருவதால் அதன் அத்தியாவசிய தேவைகள் பெரிய ஆஸ்பத்திரியில் காலதாமதமின்றிப் பூர்த்தி செய்யப்படவேண்டும். இது இலகுவான காரியமல்ல; ஆனால் அதற்கேற்ற வழிகளைக் கண்டு பிடிப்பதில் தாமதம் ஆகாது.

மருத்துவக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள ஆஸ்பத்திரியாதலில் எவ்வளவு குறைந்தாலும் அங்கிருந்து வெளியேறும் மருத்துவ பட்டதாரிகள் ஆரம்பத்திலேயே டாக்டர் 'கிட்' என்ற பட்டத்தையும் சேர்த்துக் கொள்ள நேரிடும்.

கல்லூரியும் ஆஸ்பத்திரியும் ஒன்றுக்கொன்று உதவினால் இரண்டும் வளர்ச்சியடையும். (உண்மையில் இவை இரண்டும் இரண்டறக்கலந்தவையே. பூரண தகுதியான வாதிகள் கொண்ட ஆஸ்பத்திரி, அதற்கு உயர் நிலையான பல திறமைகள் திறமைவாய்ந்த டாக்டர்களையும், நிபுணர்களையும் கருமிடமாகும். அவர்களின் அயராத சேவை வடபகுதிக்கு ஒருவரப்பிரசாதமாகும்.

மருத்துவக்கல்லூரி இன்று பல்வேறுபட்ட துறைகளாக விரிந்து, ஒவ்வொரு துறையிலும் பல பிரிவுகள் நுட்பமான விஞ்ஞான ரீதியில் சிகிச்சை முறைகளை நடைமுறைப் படுத்துகின்றன. சிகிச்சையில் வெற்றி ஆய்வு கூடங்களிலும் தொழில் நுட்ப உபகரணங்களிலும் தங்கியிருக்கிறது.

எனவே இத்தகைய பரந்து விரிந்த ஸ்தாபனமாக அபிவிருத்தியடைய வேண்டிய அவசிய முக்கியம். யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி, அதன் சாதனைகள் உலகறிந்தவை, அதன்குறைகள் நாம் உணர வேண்டியவை, அவற்றை இப்பத்தியில் அடிக்கடி விரித்திருக்கிறோம்.

மிக அவசரமான, அவசிய தேவை ஒரு தீவிர சிகிச்சைப் பிரிவு [Intensive Care Unit] என்பதை நாம் நீண்டகாலம் வற்புறுத்தி வந்தோம். அதன் குறை காரணமாக இந்த காலமும் எத்தனை பேர் அவ்வுலகெய்தினார்களோ என்று எண்ணவே அச்சம் ஏற்படுகின்றது. பல துறைகளில் பல குறைகள் இன்றும் நிலவி வருகின்றன. இவையிலும், இந்த மாபெரும் மருத்துவ ஆலயத்திற்கு பத்துலக்ஷம் ரூபாவில் ஒரு தீவிர சிகிச்சைப்பிரிவு கிடைக்க வழி பிறந்தமை பெருமகிழ்ச்சியளிக்கிறது. இன்றைய வாழ்க்கை முறையில், தீவிரசிகிச்சை ஒரு இன்றியமையாத மருத்துவ முறை.

எனவே இதற்குப் பொருளுதவியாக பிரதேச அபிவிருத்தி அமைச்சு கட்டிடத்துடன் நின்றுவிடாமல் அதற்கேற்ற உபகரணங்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் எல்லாவற்றிற்கும் மேல் வைத்திய நிபுணர்கள், பெற்றுக்கொடுப்பதில் சம்பந்தப்பட்ட எல்லா நிர்வாகத்தினரையும் ஊக்குவித்து விரைவில் செயற்பட உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

நாட்டின் திறைசேரி

உண்மைகள் எல்லாம் உடனுக்குடன் உணரக் கூடியவையல்ல. அந்தந்த காரண ஆற்றல் தீர்க்கதரிசிகளுக்கும் அரசியல் ஞானிகளுக்குமே உண்டு.

வெளிநாட்டுக்கடனிலும், வெளிநாட்டு உழைப்பிலுமே இலங்கை முன்னேறப் போகிறதான் என்பது பலருக்குத் தெரியவருகிறது.

மத்திய கிழக்கு என்று அழைக்கப்படும் மேற்காசிய நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்வருடந்தோறும் 200 கோடி ரூபாய் இலங்கைக்கனுப்புகின்றனரென்ற செய்தியே இலங்கை அரசின் வெறுப்பை விருப்பாக மாற்றியுள்ளது.

'மத்திய கிழக்கு' என்ற ஆங்கிலேயரின் புவியியற் சொல்லையே நாம் இன்றும் பாடம்படிக்கின்றோம். ஆங்கிலேயர் தங்கள் நாட்டை மையமாகக்கொண்டு உலகைக் கணித்ததால் சூரியன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அஸ்தமிக்காத காலம்! அதெல்லாம் இப்போது கருட்டுப்பட்டு விட்டது.

மத்திய கிழக்கென்பது மேற்காசிய நாடுகள். எங்களுக்குச் சொந்தம் கொண்டாடும் உரிமையுடைய ஆசிய நாடுகள், இங்கு வேலைதேடி போகிறவர்களை அரசு இதுவரையும் ஊக்குவிக்கவில்லை. இப்போது குறைவான கிரயத்தில் இவர்களை அங்கிருந்து உற்சாகப்படுத்தி அந்நிய செலவாணியை அதிகரிக்க அந்தரப்படுகின்றனர். அரசின் அசமந்தப்போக்கு.

இந்த ஞானம் உதயமானதும் அமைச்சரவை வேலை தேடிச் செல்பவர்களுக்கு கடவுச்சீட்டு [Passport] தாமதமின்றி வழங்கவேண்டுமென்று கூக்குரலிடுகிறது. இவர்களை விட எண்ணற்ற பதவிப்பட்ட உத்தியோகத்தர்கள், நிபுணர்கள் வேறு நாடுகளில் உழைக்கின்றனர். அவர்கள் வெளியேற அரசு உதவியாயிருந்தது!

கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

கல்வி என்பது பாடசாலைகளில் நான்கு சுவர்களுக்குள்ளே மாணவர் - ஆசிரியர் - பாடத்திட்டம் பாடநூல் தேர்வு என்பவற்றுக்கிடையே நிகழும் இடைத்தரக்கம் மட்டுமன்று. அது பரந்து விரிந்த பொருளுடையது. மாணவர் வீடும் இயல்பாகவே அமைந்து மறைந்து கிடக்கும் ஆற்றல்களை அனைத்தையும் வெளிக்கொணர்ந்து அவர்களும் சமூகத்துக்குப் பயன்படுமாறு உருவாக்குவதே கல்வி எனவே தான் பாடசாலைக்கு வெளியேயும், மாணவர்களுக்கு இளைஞர்களுக்கு கல்வி வாய்ப்புகள் நிறைவாக வழங்கப்பட வேண்டுமென அறிஞர்கள் கருவர். மாணவர்களின் கல்வியை பூரணப்படுத்தும் நோக்குடன் ஈழத்தில் நிறுவப்பட்ட ஒரே நிறுவனம் என்ற பெருமை தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்திற்குண்டு.

நீர் உயிரியல் ஆய்வு நிறுவனம்

1963ல் வடமராட்சி விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் அக்கரையாக தொண்டைமானாறு நீர் உயிரியல் ஆய்வு நிறுவனம் உருவாக்கப்பட்டது. தொண்டைமானாறு கடனீரேரிக்கு குறுக்கே அணை கட்டி அதனை நன்னீராக்க வேண்டுமென்றதிட்டம் வெற்றி பெறும் எண்ணத்தான அறிகுறிகள் காணப்பட்டன. தாவரவிலங்கு இனங்களின் பரம்பலிலும் இருப்பிலும் ஏற்பட்ட மாற்றம், கடனீரேரியின் உப்புத்தன்மையில் ஏற்பட்ட மாற்றம் என்பன பற்றி ஆராய்ந்த அரசுக்கும் தொடர்புள்ள நிறுவனங்களுக்கும் சமூகத்துக்கும் உதவவே நீர் உயிரியல் ஆய்வு நிறுவனம் உருவாக்கப்பட்டது. ஆர்வமும் ஆற்றலும் நிறைந்த விஞ்ஞான ஆசிரியர்கள் தமது மாணவர் படையோடு ஆய்வுக் களத்திலே இறங்கினர். இவ் வாய்வுகளின் பெறுபேறாகப் பல அறிக்கைகள் ஆசிய மன்ற ஏசியாவுக்கான பவுண்டேசன், நிதியுதவியோடு வெளியிடப்பட்டன.

வெளிக்கள நிலையம்

இப்பணி முழுவதற்கு நிலையிட அதற்கு என்ன என்ற கேள்வி எழுந்தது. இதற்குக் கிடைத்த விடையே 'வெளிக்கள நிலையம்' என்ற அமைப்பு. 1968இல் பாடசாலை விஞ்ஞான வெளிக்கள நிலையம் (S S F W C) என்ற பெயரோடு நீர் உயிரியல் ஆய்வு நிறுவனத்தின் 'வழித்தோன்றலாக வெளிக்கள நிலையம் அமைக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் விஞ்ஞான ஆசிரியர்களும் மாணவர்களும் ஆய்வு நெறியில் நேரடி அனுபவமும் பயிற்சியும் அளிப்பதே இதன் நோக்கமாக இருந்தது. நிலையத்தின் பணியின் சிறப்பை உணர்ந்த பல நிறுவனங்கள் உதவ முன்வந்தன. கண்ணாடி-இழைப் படகு, அறிவியல் நூல்கள், ஆய்வுருவிகள் அன்பளிப்பாகக் கிடைத்தன. உறுப்பினர்கள் நிதி திரட்டி பல்முகப்பயன்பாடு [ஆய்வுகூடம், நூலகம், களஞ்சியம்] கொண்ட கட்டிடத்தை நிறுவினர். ஆய்வுப் பணிகள் தொடர்ந்தன.

நிலையத்தின் பணிகளாக ஈர்க்கப்பட்ட ஐ. ஸி ஸீ (I. C. C) என்ற பாடசாலைக்கு வெளியேயான தொழிற்பாடுகளுக்கான நிறுவனம் வெளிக்கள நிலையத்தைத் தனது உறுப்பினராகக் கொண்டது. இதனூடாக நிலையம் ஐ. நா. வின் விஞ்ஞான பண்பாடு நிறுவனத்தின் அங்கீகாரத்தையும் தேவையையும் பெற்றது. பாடசாலைக்கு வெளியேயான தொழிற்பாடு களுக்கான ஒரே நிலையமான இது இலங்கை முழுவதிலுமுள்ள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கும் நிலையமாகக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது. இந்நிலையத்திற் பயிற்சி பெற்றவர்கள் இன்று தென்னிலங்கையிலே மூன்று வெளிக்கள நிலையங்களை உருவாக்கியுள்ளார்கள்.

வருந்துகின்றோம்

'ஈழநாடு' 19-11-81-திகதிய இதழில் "வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் கவனத்திற்கு" என்ற தலைப்பில் வெளியான "மக்கள் கருத்தில்" தொண்டைமானாறு விஞ்ஞான வெளிக்கள நிலையம் தொடர்பாக கூறப்பட்டுள்ள குறிப்புகள் முற்றிலும் உண்மைக்கு மாறானவையென அறிகின்றோம். நிலையாப்பிரகாரமாக ஏற்பட்டுவிட்ட இத்தவறுக்காகவும் இதனால் பேற்குறித்த நிறுவனத்துக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய மனச்சங்கடங்களுக்காகவும் வருந்துகிறோம்.

(ஆ-ர்.)

வெளிக்கள நிலையம் தேசிய நிதானமுள்ள மாணவர்-ஆசிரியர் சமூகத்தின் கல்வித் தேவைகளை உணர்ந்து அவற்றுக்கேற்பத் தன்னைக் கரிப்புக்கு உட்படுத்தி நிப்பன் முகப்பட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. அவற்றுட் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

ஆய்வுப் பாசறைகள்:

காலத்தோறும் மாவட்ட தேசிய, அனைத்துலக அடிப்படையில் இளைஞர்களுக்கான பயிற்சிப் பாசறைகளும் இளைஞர் தலைவர்களுக்கான (ஆசிரியர்கள்) பாசறைகளும் நடத்தப்படுகின்றன. பயிற்சியாளர்களுக்கு விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள "பசுமைப் புரட்சி" என்ற தலைப்பில் மாவட்ட, அனைத்திலங்கை, அனைத்துலக அடிப்படையில் மூன்று ஆய்வுப் பாசறைகள் நடத்தப்பட்டன இவற்றின் அறிக்கைகளை ஐ. சீ. சீ நிறுவனம் நூல்வடிவில் வெளியிட்டது. இப்போது சக்தியின் காற்று வடிவங்களும் இயற்கை மூலவளங்களின் மீள் சுழற்சியும் என்ற தலைப்பில் மாவட்ட, தேசிய அடிப்படையிலான பாசறைகள் நடத்தப்பட்டுள்ளன. விண்ணியலும் இலத்திரனியலும் என்ற பொருள் பற்றிய ஆய்வுப் பாசறைத் தொடர் ஒன்றுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பனம் பொருள்கள் பற்றிய ஆய்வும் தொடராக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாணவர் ஆய்வுப் பணிக்கொடை:

ஆய்வுப் பாசறைகளின் திறமை காட்டும் மாணவர்களுக்கு அவர்கள் மேற்கொண்ட ஆய்வைத் தொடர்ந்தும் நடத்த ஆய்வுப் பணிக்கொடை [Research Granct] வழங்கப்படுகிறது. இதுவரை ஐந்து மாணவர்கள் ஆய்வுப் பணிக்கொடை பெற்றுள்ளனர். இதற்காக மூன்று ஆண்டுகளுக்கு வழங்கிய 60.0 ரூபா வங்கியில் நிலையான இருப்பு நிதியாக இடப்பட்டுள்ளது. இதிலிருந்து வரும் வட்டி, மாணவர்களின் தேவைக்கு வழங்கப்படுகிறது.

[நாளை முடியும்]

மயிலங்கூடலூர் பி. நடராசன்

(இதழ். ஆசிரியர் குழு உறுப்பினர், வெளிக்கள நிலையச் செய்திக்குறிப்பு ஆங்கிலம்)

எழுத்தாளனும் மனித உரிமைகளும்

[நேற்றைய தொடர்ச்சி]

எழுத்தாளனுக்கு விலங்கிடும் நோக்கம் அவனை மௌனியாக்குவதே. ஆனால் சங்கிலிகளைவிட சொற்கள் வலிமையாய்த்தான் எனப் பொதுச்செயலாளர் வலியுறுத்துகிறார். இதற்கு இரண்டு உதாரணங்களை அவர் தருகின்றார். இந்தோனேசிய நாவலாசிரியர் பராதோஜதயா அனந்தது 1960களின் பிற்பகுதியில் சிறைபிடிப்பட்டார். முதலில் அவருக்கு ஏழுவருடங்கள் கடுங்காவலும் மறுக்கப்பட்டன தனது சக கைதிகளுக்கு அவர் மாலைகளில் கதைகள் சொல்லத் தொடங்கினார். 12 ஆண்டுகளுக்குப்பின் 1979ல் அவர் விடுதலை செய்யப்பட்டதும் இக் கதைகளைத் தொகுத்து இரண்டு நூல்களாக வெளியிட்டார். இந்த ஆண்டு இத் தொகுப்புக்களை இந்தோனேசிய சட்டமாதிபர் தடை செய்தார். அலிமாமேத் என்ற வெனசுயேலா கவிஞன் வடகொரியாவில் ஆறு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். சிறையிலிருந்த காலத்தில் ஏறக்குறைய 700 கவிதைகளை யாத்தார்- உனதுக்குள்ளே. "எனது ஞாபகசக்தியைத் தவிர மற்றெல்லாவற்றையும் அவர்கள் கொன்றுவிட்டனர்" எனவாமேத் விதந்து செய்யப்பட்டதுக் குறிப்பிட்டார்.

பேச்சு, வெளிப்பாடுச் சுதந்திரம் சர்வதேச சட்டத்தின் இன்றியமையாப் பகுதியாக எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் இது எழுத்தாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவில்லை எனச் செயலாளர் சுட்டிக் காட்டுகின்றார். இந்த உரிமையை செயற்படுத்த விழைந்த எழுத்தாளர்களுக்கு நேர்ந்த கதி? 'ஆட்சியாளரை கவிழ்க்க விழைபவர்கள்' அல்லது அரசிற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடுபவர்கள் என்ற 'நாமம்' சூட்டப்படுகின்றது. அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு; சிறுபான்மையினருக்கு அனுதாபம் காட்டுபவர்கள் மீது 'பிரிவினைவாதிகள்' என்ற குறி சுட்டப்படுகின்றது.

ஆசாடபூதிகளை அம்பலப்படுத்தி, மனித உரிமைகளுக்காக உழைக்கும் பலர் இன்று 'மனச்சாட்சி கைதிகளாக' சிறைகளில் வாடுகின்றனர். "பீடாதிபதிகள் இத்தகையவர்களை எழுத்தாளர்களாகவோ பத்திரிகையாளர்களாகவோ ஏற்பதில்லை. அப்படி ஏற்பது அதிகாரபீடத்துக்கு சவாலாகத் தானே!

பண்டைப்பாரம்பரியமும் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் நசுக்க விழையும் நச்சுச் சக்திகளின் ஆபத்து இருக்கத்தான் செய்யும். இதனால் மனச்சோர்வடைய வேண்டியதில்லை என்கிறார் மனிதஉரிமைச் செயலாளர். 'நாம் சாதிக்கக்கூடியது எவ்வளவோ இருக்கின்றது. மௌனிகளாக ஆக்கப்பட்டவர்களோடு எமக்கிருக்கும் தோழமையுணர்வை நாம் பிரகடனப்படுத்த வேண்டும்" என அவர் எமக்கு உற்சாகம் ஊட்டுகின்றார்.

கலை இலக்கியத்தை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் சக முயற்சிகளும் தோல்வியிலே முடியும் என்ற உறுதியான நம்பிக்கை எனது உந்து சக்தியாக விளங்கவேண்டும்.

—கனகு

சீன ராணுவமயம்: அமெரிக்கா உதவுகிறதாம்

நியூயோர்க், நவ. 26

'சீன இராணுவ நிபுணர்கள் ஒவ்வொருவரையும் நவீனப்படுத்துவதற்கு, அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்கள் 10,000 டாலர் முதல் 15,000 டாலர் வரை மதிப்புள்ள வியாபாரம் செய்வார்கள்' என்று கூறப்படுகிறது. 'பெண்டகன்' மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு இவ்விதம் கணக்கிடப்பட்டுள்ளது.

சீன இராணுவத்தை நவீனப்படுத்த 4,100 கோடி டாலரிலிருந்து 6,300 கோடி டாலர் வரை செலவிடும் அமெரிக்க ஆயுதங்களும் மற்றும் தளவாடங்களும் தேவைப்படுகின்றன 'பெண்டகன்' கருதுவதாக 'யு. எஸ். நியூஸ் அண்ட் வோர்ல்ட் ரிபோர்ட்' சஞ்சிகை கூறியிருக்கிறது. சீன ஆயுதம் வாங்க அதற்குக் கடன் கொடுக்க வேண்டுமென்றும், அமெரிக்க அரசாங்கங்கள் அடிப்படையில் ஆயுதங்களைக் கூட்டாக உற்பத்திசெய்ய ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படவேண்டுமென்றும் அந்தச் சஞ்சிகை கூறியுள்ளது.

'சீன ஆயுதம் வாங்குவதற்குச் சுலபக்கடன்கள் அளிக்கப்படவேண்டும் என்று தீவிர வாதிகளும் மரபுவாதிகளும் எதிர்ப்பு வெளியிட்டாலும் கடந்த காலத்தில் வற்புறுத்தியதுண்டு. 'சீனாவின் இராணுவ உள்ளார்ந்த நிலை சோவியத் யூனியனுக்கு எதிராகப்பயன்படுத்தலாமென்ற நம்பிக்கையில், சீனாவைப் பெருமளவில் நவீன ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் நாடாக மாற்றலாம் என்ற கருத்தை, வாஷிங்டனிலுள்ள செல்வாக்குப்பெற்ற வட்டாரங்கள் எதிர்க்கவில்லை' என்று அந்தச் சஞ்சிகை கூறியது.

அணு ஆயுதக் கட்டுப்பாடு

பிரஸ்நேவ் ஸ்மித் இணக்கம்

பொன், நவ. 26

மேற்கு ஐரோப்பாவில் அணு ஆயுத ஏவுணைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சோவியத் ஜனாதிபதி திரு. பிரஷ்னேவும், மேற்கு ஜெர்மன் அதிபர் திரு. ஸ்மித்தும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக இவ்விரு நாடுகளின் தலைவர்களும் கடந்த மூன்று தினங்களாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சமரசமான முறையிலும், பேச்சுவார்த்தை மூலமும் அணு ஆயுத ஏவுணைகள் உற்பத்திசெய்யப்படுவதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று பேச்சுவார்த்தையின்பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையொன்றில் இவ்விரு தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

அணு ஆயுத உற்பத்தியை எதிர்த்து ஆயிரமாயிரம் கண்ணையில் மாபெரும் ஊர்வலமொன்று நடத்தப்பட்டது தெரிந்ததே. (பெ)

மருந்துவகைகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

எடுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை, தொண்டுமனம் மத்திய மருந்துச்சாலை வரை நகர் அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிற்கு இவ்வருட வரவுசெலவுத்திட்டத்தின் மருந்துவகைகள் இம்மாதம் 30 ம் திகதியன்று நேரடியாக லொறிமூலம் கொண்டுசென்று விநியோகிக்கப்படவுள்ளதாக வாழ். சுகாதாரசேவைகள் கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்காசியப் பிரச்னை:

சவூதி சமரசத்திட்ட மாநாடு ஒத்திவைப்பு!

பெய், நவ 26

மேற்காசியப் பிரச்னை தொடர்பான சவூதி அரேபியாவின் சமரசத்திட்டத்தைப் பல அரபு நாடுகள் எதிர்த்து வருவதால், இதுதொடர்பாக ஆராயும்பொருட்டு நேற்று மொரோக்கோவில் நடைபெறவிருந்த அரபுத் தலைவர்களின் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அரபுநாடுகள் அனைத்தும் சீரிய ஒருமித்த முடிவொன்றை எடுக்கும்முகமாகவே இம்மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக மொரோக்கோ மன்னர் ஜனாப் ஹஸன் செய்தி தெரிவித்தார்.

இத்திட்டம் பற்றி ஆராய்வதற்காக புதிய மாநாடொன்றைக் கூட்டுவது பற்றித் தீர்மானிப்பதற்காக அரபுநாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கூடவிருக்கிறார்கள்.

சவூதி அரேபியாவின் சமரசத் திட்டத்தை ஈரான், லிபியா, பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆகியன எதிர்த்து வருவது தெரிந்ததே.

1979-ம் ஆண்டு இங்கிலாந்துடன் ஒப்பந்தம்செய்துகொண்டதையடுத்து அரபுலீகத்திலிருந்து நீக்கிவைக்கப்பட்ட எகிப்துக்கு இம்மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. (பெ)

ரூ. 10,000 நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

கிளிநொச்சி இலங்கை மாதர் சிறுவர் அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு மிகச்சிறிய விநியோகம் செய்வதற்கும், கவிடிடிருந்த வேலைகளைச் செய்து முடிப்பதற்கும் 10 ஆயிரம் ரூபாவை உள்வருட பகுதியைப்பயன்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திற்கீழ் வட்டுக்கோட்டை எம். பி. திரு தர. திருநாவுக்கரசு ஒதுக்கீடு செய்துள்ளார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

பிலிப்ஸ் கிறைப் மருந்து

உங்கள் குடும்பத்தின் சின்னக் குழந்தைக்கு இதமூட்டும் நம்பகமான பிலிப்ஸ் குடும்ப உற்பத்திப் பொருள்!

குழந்தைக்கு ஏற்படும் வாயுப் பொருமல், வயிற்று வலி மூச்சுத் திணறல், பல் முளைப்பு வலி, மற்றும் சிறு சங்கடங்களுக்குத் துரிதமான இதமான நிவாரணம் தரும். முழுப் பாதுகாப்புத் தரும் விதத்தில் வெளி நாட்டில் கிருமித் தாக்கம் நீக்கப்பட்டது



ஆகக்கூடிய சில்லறை விலை:
60 மி.லி - ரூ. 6/-
200 மி.லி. - ரூ. 12/-

தயாரித்து விற்பனை செய்வோர் -
மக்வூஸ்- விந்த்ரெப் லிமிட்டெட்
அலுவலகமும் பண்டசாலையும் 35, மாதம்பிட்டி வீதி, கொழும்பு 15.
த பெ எண 1744, தொலைபேசி 591381 - 2, 590080

Mel Ads

இலங்கை இரசிகர்களை பல விதத்திலும் கவரும் இந்திய இலங்கைவாத்து டெஸ்ட் இன்று பம்பாயில் ஆரம்பமாகிறது.

இந்தியாவுக்கு வரும் கிரிக்கெட் அணிகள் இலங்கையிலும் விளையாடிச் செல்வது வழமை. இவ்வாறு நியூ சீலாந்து கோஷ்டியின் இந்திய சுற்றுப் பயணம் வரவாற்றில் முதல் தடவையாக டெஸ்ட் விளையாடப் போகும் இலங்கையின் இந்திய அணியின் கப்டனாக மீண்டும் பம்பாய் புகழ் கவாஸ்கர் நியமிக்கப்பட்டுள்ளார். உலகிலே சிறிக்கெட் வரலாற்றில் ஆகக்கூடிய 29 செஞ்சுரிகளைக் கண்ட "டொன் பிரட்மன்" சாதனையை முறியடிக்க 34 வயதான கவாஸ்கர் இன்னும் ஆறு செஞ்சுரிகள் மட்டுமே

பம்பாய் கவாஸ்கரின் சாதனை இலக்கை நிர்ணயிக்கும் கிரிக்கட் டெஸ்ட்

போட்டாக வேண்டும். அது மட்டுமன்றி டெஸ்ட் ஆட்டங்களில் 27 ஐம்பதுகளையும் 58 "கள்"களையும் எடுத்திருக்கும் கவாஸ்கர் பெற்ற ரன்கள் 6218 ஆகும்.

இந்திய அணியில் புதிதாக இணைந்திருக்கும் தமிழக ஆட்டக்காரர் சதிஸ்சிறீகாந்த் தமிழ் நாடு கிறிக்கட் அணியின் தவக்க ஆட்டக்காரராக இருந்து பல சாதனைகள் புரிந்த "வடகமி" சிறீகாந்திற்கு வயது 21 தான். சாதனைகள் புரியும் இந்த வயதுக்கு 21 வயதிலேதான் தனது முதல் டெஸ்ட் விளையாடி சாதனை செய்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணிக் கெதிராக தனது தலைமையில் 22 வயதுக்குட்பட்டவர்களின் அணியில் இரண்டு இன்னிங்ஸிலும் 161 ரன்களைக் குவித்து பிரமிக்கச் செய்துள்ளார் இவர். மீண்டும் கிரிக்கட் சபை அணிக்காக ஆடி போட்ட 66 ரன்களையும் மறக்காமல் இந்திய தேர்வாளர்கள் பழம் பெரும் ஆட்டக்காரர் சலீம் துரானியை விட்டு வாஸ்நிக் தவக்க ஆட்டக்காரர் "பாட்னராக" சிறீகாந்தை சேர்த்திருக்கிறார்கள் என்றால் அவரின் வெற்றி நிச்சயிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகிறது

நீண்ட இடைவேளையின் பின்னர் "ஆர்வுண்டர்" மதன்லால் சர்வ வுயின் இடத்தை இந்திய அணியில் பெற்றிருக்கிறார். அத்துடன் இந்திய அணி இங்கிலாந்துக்கெதிராக பெற்ற ஆறு டெஸ்டுகளிலும் "சுழற்பந்தில்" மகிமையை உணர்ந்து நான்கு சுழல் பந்து வீச்சாளர்களை அணைத்து இருக்கிறார்கள். ரவிசாஸ்திரி, டிலிப் டோஷி, சிறீநிவாஸ் ஆகியோரின் சுழல் பந்துடன் தவக்க பந்து வீச்சாளர்களை புழ்மிக்க கபில் தேவ், மதன்லால் பந்து வீச்சு பகுதியை நிறவு செய்கிறார்கள்.

துடுப்படியில் சிறீகாந்தும் கவாஸ்கரும் தவக்க வைக்க வெங்சர்கார், விஸ்வநாத், சந்தீப்பட்குலி, கிர்மானி போன்றோர் அணி வகுக்கிறார்கள்.

இந்திய அணியில் கியூம் இப்படி இருக்க இங்கிலாந்து அணியில் நிறைமாள் வளர்ச்சியைக் கவராமல் இல்லை. இவர்கள் இதுவரை மூன்று ஆட்டங்களில் வெற்றி கிட்டாமல். இங்கிலாந்தின் 'சுழற்பந்து நிலைமை மறக்கவேண்டிய ஆட்டமாக விக்கட்டுகளை வீழ்த்த வல்லமை கொண்டவர்

பந்து வீச்சில் சென்றமுறை இந்தியா வந்தபோது சாதனை புரிந்த வீரர் துணைக்கட்டன் பொப்லிங்கிற் போன்றோரும் வைகொடுக்கவே செய்கிறார்கள்

தடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை டெஸ்ட் ஆட்டங்களில் சென்சுரி (106) டெஸ்ட்களை கண்ட "பேர்க்கெட்" இங்கிலாந்து அணியின் ஆரம்ப காபார தடுப்பாட்ட வீரர். டெஸ்ட் ஆட்டங்களில் ஆகக்கூடிய ரன்களை பெற்ற சேர் ஹரி சோபர்ஸின் சாதனையை மீற அவர் இன்னும் 161 ரன்களை மட்டுமே பெறவேண்டும். அத்துடன் சுழற்பந்தில் ஜமாய்க்கா அணிக்கு விளையாடிய கீத் பிஸ்சர் 'தங்க புதல்வன்' மைக்கேலிற்கு இடம் பொறிம் போன்றோரும் தடுப்பாட்டத்தில் சாதனை செய்பவரே செய்வார்கள்

இந்திய அணிக்குரிய ஒரே மனப்பயம் இந்திய மண்ணில் விளையாட எடுபடாத இந்திய ஆட்டம் எந்த அளவுக்கு வெற்றியளிக்கும் என்பதே சுவாரஸ்யமே.

கவாஸ்கர், சேஷாத்ரி சாதனையும் போக்கோட்டிகள் ஆகக்கூடிய ரன்கள் சாதனையும் இந்த டெஸ்ட் தொடரில் நிலைநாட்டுமா என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

— க. பேரின்பநாயகம்

சண்டித்தனம்

(தொடர்ச்சி)

ஒரு பக்கத்து கேட்டியிலும், மற்ற பக்க அவலில் இருந்த இரத்தத்தை மற்றக் கையால் துடைத்த மற்றப்பக்க கேட்டியிலும் துடைத்தார். 'சண்டித்தனம் இருந்தால்...

பிள்ளை செல்லையாப்பார்த்த 'செல்லக் கண்டித்தனமிருந்தால் இனி எழுப்பு' என்று கூறினார் எதிரி செல்லையை வெட்டும்போது நான் 'ஐயோ ஐயோ' என்று குறிவேன் தேவையானால் அவனைப் பொலிஸ் அடி, சந்தியால் வெட்டவே' என்று கும்பிட்டுக் குறினேன். இருந்தும் அவர் வெட்டிவிட்டு பட்டியைத் திறந்தவண்டு போய்விட்டார்'

'இராசையா எனது மகன் அவர் உடனடியாகக் கார் கொண்டுவந்து செல்லையை மத்திய வைத்தியசாலைக்குக் கொண்டு

சோபர்ஸ் இன்று வருகிறார்

(தொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் திருவளத்தை பிரபல கிரிக்கெட் வீரர் சேர் கார்பீல்ட் சோபர்ஸ் ஆராய்ந்து செல்லவிருக்கிறார்.

ஹோட்டல் ஹில்டனில் ஒபரேயில் நடைபெறவுள்ள அகில ரரர்ப்பணவைபவத்தில் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா பிரதம அதிதியாக வந்து கொள்வார். இவ்வைபவத்தின் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவரும், வைத்தியருமான திரு சாமினி திசநாயக்க ஒழுங்கு செய்துள்ளார்.

இன்று இலங்கையரும் சேர் சோபர்ஸ் ஒன்றாக கலைச்சாமினிடம் இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டினை மேம்படுத்துவதற்கு தான் ஆதரவு வழங்குவதாக உறுதி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

புதிய கிரிக்கெட் திருவளம் இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டுக்கான நிதியினை வளர்க்கப்பலும், வெளிமாவட்டங்களிலுள்ள பாட சாலைகளில் கிரிக்கெட் விளையாட்டுக்களுக்கு ஊக்கமளிப்பதுடன், வறிய குடும்பத்திலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு உதவுதல், டெஸ்ட் பந்தயத்தரத்திற்கு அரங்குகளை அமைத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டு விளங்கும் என்று கூறிக்கப்பட்டுள்ளது. (வி)

இராணுவம் - பொலிஸ் கைகலப்பு

(தொழும்பு)

இராணுவத்தினரும், பொலிஸாரும் கைகலப்பில் ஈடுபட்டு இரு இராணுவ வீரரும் ஒரு பொலிஸாரும் காயமுற்ற சம்பவம் கிரிலப்பனைப்பகுதியில் இடம் பெற்றுள்ளது

காயமடைந்த இரு இராணுவ வீரர்களும் விபத்து சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கைகலப்புப்பற்றிக் தெரிவித்த கிரிலப்பனைப் பொலிஸார், கொக்கே ஒன்று சம்பந்தமாகப் புலன் விசாரணை நடத்தச் சென்றபோதே இதுபோன்ற விபத்தாகவும், கவ்வி தனைச் சேர்ந்த வாகனங்களும் இம்மோதலில் சேதமடைந்தாகவும் கூறினர். இராணுவ வீரர் ஒருவர் விசாரணைக்காக தேடப்படுவதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர் (வி)

கொள்ளை

(சாவகச்சேரி)

அல்லாரையைச் சேர்ந்த வ. வாரித்தம்பி என்பவருடைய வீட்டில் ஆறுபேர் கொண்ட கோஷ்டி ஒன்று சென்று அவரை பலமுறுத்தி 4,650 ரூபா பணத்தையும் தங்கமணியையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

ரூபவாஹினி சட்டமூலம்

(தொழும்பு)

ரூபவாஹினி நிலையச் சட்டமூலம் இன்றைய பாராளுமன்றத்தில் தாக்கல்செய்யப்படவிருக்கிறது.

ரஜிவ் விஜேசிங்க பொலிஸ்மேரில் இதனைச் சமர்ப்பிக்கப்பட்டது. தற்போதுள்ள தொலைக்காட்சிகளை இதன் கீழ்ப்பட்டுக்குள் கொண்டு வரப்படும் (வி)

REGAL (Jaffna
Daily 10-30, 2-15, 4-30
7-00 & 9-15
Challenge
IN THE
Last Paradise
(Color)
From 28-11-81
BILLION DOLLAR
THREAT

வெல்லி (வாலிபர்கள்
தினசரி: 2-30, 6-15, 9-30
ரஜனிகாந்த்-பாலாஜி
தீ

ஜூபன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-விஜயா
இதோ எந்தன்
தெய்வம்
(புதிய பிரதி)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வாரி
உயர்ந்தமனிதன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15,
4-45, 7-15 & 9-30
THE BETSY
(Color-Adults only)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15 6-15, 9-30
நாகேஷ், கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்
சர்வர்சுந்தரம் (புதிய பிரதி)

சாந்தி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15
& 9-45
வரவரப்பூட்டும்
11 வது
ஜனத்திரள் வாரம்!
குரு

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி-கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம். ஜி. ஆர்.-லதா நடித்த
சிரித்து வாழவேண்டும்
(சக்கிமன் கலர்)

தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
BRUCE LEE'S
ENTER THE DRAGON

மின்ஸர் 2-வது ஜனத்திரள் மாதம்
(யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி.ப. 2-30, 6-15 9-30
ரஜனிகாந்த், சீமா (இருவேடம்),
விஜயகுமார், படாபடி,
கருவிராஜன்
(கலர்)
காளி
பார்த்தவர்கள் போற்றுகிறார்கள். பல லட்ச ரூபா செலவில் உருவான பயங்கர சண்டைகள்—இனிய பாடல்கள்—நிறைந்த நெஞ்சைத் தொடும் காவியம்

இன்றைய பலன்

சுபாத்திரை வருஷம் 11 ம் திகதி
வெள்ளிக்கிழமை
(27 - 11 - 81)

மேடம்- உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேறுபாடாகப்படும். தொழில் துறையில் முன்னேற்றங்களைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம். ஆனால் போராடுதலில் மூலம் வெற்றிக்கோளாறு ஏற்படலாம்.

இடபம்- வியாபார சம்பந்தங்களில் இடம் பெறும். அரசியல் பிரமுகர்களுக்கு மகிழ்ச்சி பிரிதலால் மீண்டும் இணைவர். குழந்தை ஒன்றினால் முன்னேற்றம் மகிழ்ச்சி ஏற்படலாம். தொழில் புரியும் இடத்தில் நல்ல மாற்றங்கள் உண்டு

மிதுனம்- நண்பர்களோடு நடக்கும். விவசாயத்துறையில் நஷ்டமேற்படலாம். அதிக முயற்சியுடன் தவிர்த்துக்கொள்ளவும். சிலருக்கு வாகனங்கள் பழுதடையக்கூடும். உணவு விடயத்தில் அதிக கவனம் தேவைப்படும்.

கடகம்- பகைவரால் தொல்லைகள் ஏற்படும். பொதுப் விவகாரங்களில் ஆர்வம் பிறக்கும். மதத் தலைவர் ஒருவர் நல்லபடி வழிகாட்டுவார். விடுக்கொடுக்கும் தன்மையினால் நல்ல பெயரும் கிடைக்கும்

சிங்கம்- கடன்பட்டோரிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். பயணங்களால் சந்திப்பு இன்று நிகழும். இலாப நட்டங்கள் ஆலோசனைகளை உருவாக்கும். கலைஞர்கள் ஆதரவும் கிடைப்பதற்கு இடமுண்டு

கன்னி- எளிமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல் கனிந்தமையும். விருந்தினர்கள் வரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சி மேலிடும்.

துலாம்- சிறிவரும் சோபம் உங்களை நிலை தடுமாறவைக்கும். வேண்டியவர்களுடன் பகைத்துக்கொள்ள நேரிடலாம். காணிய நஷ்டத்துக்கு இடமுண்டு. ஆடைகளும் செலவினங்களும் கட்டுப்படுத்தும் தன்மையும் வேண்டும்.

விருச்சிகம்- வாழ்க்கை புதிய திறந்தவாயே இருக்கும். எதிர்பாராவிதம் இறுதி நிலையில் ஏமாற்றத்தை அளிக்கும். நலனைச் செய்யினும் விளைவு மகிழ்ச்சி நேரிடும். வெளியிடத்துப் உதவி வேண்டவைத்தாலாம், நிடமிருந்தும் கிடைக்கும்

தனு- ஆடம்பரவாழ்வுக்கு இன்று சிறப்பாகவிளங்கும். உண்மையைப் பெறுவதில் புதிய பாதை தென்படும். முதியவர்களின் உபதேசம் முன்னேற்றத்தை அளிக்கும், புதிய விருப்புக்கு இடமுண்டு.

மகரம்- அதிக ஆசையைப் பண்மூலம் அடைவிப்படுவிர்கள். குறுக்கு வழியில் அதிகாரத்தை எண்ணம் தோன்றலாம். ஆத்திரப்படுதல் தரக் விபரீத விளைவுகள் ஏற்படும். நடைமுறை பலவீனம், அவசர முடிவைத் தவிர்க்கவும்.

கும்பம்- வாகனம் செலுத்துவோருக்கு இன்று நல்ல மகிழ்ச்சி கிடைக்கும். நாய்வழித் தனவரவுக்கு இடமுண்டு. கல்வித் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், சுபதினம்.

மீனம்- உள்ளத்தில் உவகை தள்ளும், நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள். முதியவர் ஒருவர் முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவார். தேக சிந்தும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதுடன் தேடியதும் கிடைக்கும். வெற்றி தினம்.

சோதிடக் வாரிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

செல்லூர். நானுமிடச் சென்றேன். அந்த செல்லன் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது 10-10-81 அன்று கொலையாக இது சம்பந்தமான விசாரணைக்கு வந்தவர்கள் நான் சம்பவம் நடந்த இடத்தை அவர்களுக்கு காட்டியதுடன் நடந்த விபரத்தையும் கூறினேன். பின்னர் மரணவிசாரணையிலும் சாட்சியமளித்தேன்."

நத்தார் இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

கைதடி செல்வபுலம், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் ஏடுபாடத்த நத்தார் இசை ஆராதனை 28ம் திகதி சனிக்கிழமை காலை யாழ் நிலமர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ)

நால்வர் மீது விசாரணை

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் 'தமிழன் குரல்' பத்திரிகை வைத்திருந்த நால்குபேர் இராணுவத்தினரால் விசாரணைக்குபடுத்தப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக விசாரணைக்குக்காக யாழ் பொலிஸார் யாழ்ப்பாணத்துள்ள ஒரு அச்சகத்திலிருந்து சில ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளனர். (மா)

31-ம் நாள் நினைவஞ்சலி

மகேஸ்வரலிங்கம் சேயோன் (கண்ணு)

தோற்றம்: 22-6-1973

மறைவு: 28-10-1981

கடவுள் கண்ணுவை தன தாக்கிக் கொண்டாலும், கனவிலும் நினைவிலும் உன் கனிவான முகம் எம் மனதை விட்டு அகலாது.

உன் அன்பிற் பிரிவாக் காரும்

அப்பா, அம்மா, அக்கா, உறவினர்.

1566

இன்று

[யாழ்ப்பாணம்]

இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்க யாழ். கிளையின் ஆதரவில் 64 வது மாபெரும் அக்டோபர் புரட்சி தினக் கூட்டம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

உடுவில் எ. பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் திரு. ஆ. வியத்தலிங்கம், திரு. மு. ஏரம்பமூர்த்தி, திருமதி பத்மா சிவகுருநாதன், திரு. ஆர் சிவநாதன், திரு எம். சி. கப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை பாற்றுவார்கள்.

நாவலர்பேரால் அன்னதானம்

[யாழ்ப்பாணம்]

புதுநகர் நாகதம்பிராள் ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவுதினம் தொச்சியாதாமம் திரு. மு. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது. பொங்கல் பூஜை நடைபெற்று அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆறுமுக நாவலர் பேரால் நூலகம் ஒன்று கட்டுவதற்கு இக்கு முன்வந்திருக்கிறார்கள்.

வடபகுதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிடைத்தது. ஆனால் பின்பு இவர்கள் வேலை நிறுத்தத்திலீடுபட்டிருந்தபடியால் பக்குவற்ற முடியாதென யாழ் மாவட்ட தொழில் இலாகா அறிவித்துவிட்டது.

இதே சமயம் தொழில் நிலைக்களத்தினால் கொழும்பு ஏனையை மன்றக் கந்தூரியில் செப்டம்பர் 14ம் திகதி முதல் 18ம் தேதிவரை நடைபெற்ற இதேபோன்ற கருத்தரங்கில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த வடமாகாண ஆசிரியர் சங்கச்செயலாளர் திரு த. தேவராசா கலந்துகொண்டார். 'தொழிற்சங்கத்தில்' தச் சேர்ந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களும் கருத்தரங்கில் பங்குபற்றினார்கள். (ம)

சேர் பொன்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிங். இந்நினைவு தினக்கொண்டாட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்கள், ஆணையாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (மா)

கேட்டீர்களா?

தேவன்மாஸ்டர் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெறப் போகிறாராம்.

மீண்டும் அவர் கடுக்காவின் முறிறு யாழ். ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று அண்மையில் வீடு திரும்பியுள்ளார். ஒரு கண் பார்வையை முற்றாகவே இழக்கவேண்டிய நிலையிலிருந்து அதிர்ஷ்டவசமாகத் தாம் தப்பிக்கொண்டதாக அவர் என்னிடம் தெரிவித்தார். வெட்டொன்று துண்டு இரண்டாகக் கணிசெய்கிற அவரது தூரலைக் கொண்டுதான், தேவனை இனங்காணக்கூடியதாயுள்ளது.

ஆசிரியப்பணியினின்றும் ஓய்வு பெற்றாலும் ஓர் அச்சகத்துடன் இணைந்து மக்களும் மாணவர்களுடனும் தொடர்புச் சேவையிலிருக்கப் போகிறார் என்று சொல்லுகிறார் அவரது நண்பர் ஒருவர்.

∴ ∴ ∴

'ரத்திரி முழுதும் நித்திரையிலை' என்று அலுத்துக் கொண்டார் எனது காரியாலய நண்பர். உண்மைதான். நண்பர்மட்டுமென்ன, நகரமக்கள் எல்லாருமே கடந்த ஒரு மாதத்திற்கு மேலாகச் சிவராத்திரிதான். நுளம்பு [சீசன் அல்லவா? அதுகிரீங்காரம் இசை அமுதத்தை வெள்ளுவதில் என்ன ஆச்சரியம் [உண்டது.

நகரமக்களென்ன கிராமமக்களும் கூட இரவில் தூக்கமின்றி கலங்குகிறார்களாம். ஏனென்றுகேட்டதற்கு சன்னர் பயத்தினால் என்கிறார் நண்பர். ஒன்றுமிலாதவனே இன்று அதிக நிம்மதியாக வாழ்கிறான் என்கிறார் அவர். 'நிரைகடலோடியும் நிரவியம்தேடு' என்று சொன்ன ஔவையார் இன்றிருந்தால்?

∴ ∴ ∴

மழைகாலம் ஆரம்பித்துவிட்டதால், காலத்துக்குக்காலம் நவீனக் கூச்சல் போன்று ஒரு குரல் கிளம்பும்! 'நீரைத் தேக்கி நிலத்தைக் காப்போம்' என்பதே அந்தக்குரல். இந்தக்குரலுக்கு யாரும் செவிசாய்க்கிறார்களா என்பது தெரியவில்லை. இவ்வாறு குரல் கொடுப்பவர் 'மிக்கவைறி' அதிபர் திரு. க. கனகராசாதான். அவர் தெரிவிப்பதாவது!

"யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகள் ஏன் மற்றவர்களுடன் நீரைப் பாதுகாக்க எத்தனங்கள் செய்யவேண்டும். தற்காலத்தில் முன்னைப்போல் அல்லாது மழைவீழ்ச்சி மாரிகாலத்திற்கூட மிகச் சொற்பமாக இருக்கின்றது. எங்கள் மரவளங்களை செல்ற கொழுத்தத்தின் போசனை பிரதிபோசனத்தர்ப்ப சூழ்நிலையானோ அழிந்ததே இதற்குக் காரணமாகும்."

"மழைநீரைப் பொன் போலப் பாவித்துக் கடலுக்கு ஓடவிடாமல் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்காக நாங்கள் ஒவ்வொருவரும் வரம்புபோடக் கட்டவேண்டும். குளங்களை ஆழமாக்கவேண்டும். இக் குளங்களை ஆழமாக்கும்பணியில் நாம் மண்வெட்டி, தாச்சி போன்ற உபகரணங்களைக் கொண்டுதவுகின்றோம் ஒவ்வொருகிராமமும். இதைப் பயன்படுத்தினால் நீரைப் பொன்னளவு பாதுகாக்கலாம். இவ்வருடம் இப்பணியைச் செய்ய நாம் நமக்கு உபகரணங்களைப் பெற எத்தப் பொருத்தாபனங்களும் காரதது வெகு அக்கறையது" ∴ ∴

வாழைப்பழத்தை உரித்து நம்மவர்க்குத் தீத்தியும் விட வேண்டுமா?

—கொண்டோடி.

இப்படியும் நடக்கிறது

கந்தளையைச் சேர்ந்த திரு. ஆர். எம். நிஸநாயக்கா என்பவரிடம் பிரயாணிகள் வாகனம் உண்டு. அவர், தனியார் போக்குவரத்துச் சேவை நடத்திவருகிறார்.

ஒருநாள், இவரது வாகன நடத்துநர் ஒருவர் [கண்டக்டர்) பிரயாணி ஒருவர் தவறுதலாக தனது பையை வைத்துவிட்டுச் சென்றதை அவதானித்து, அதனைப் பத்திரமாக எடுத்து முதலாளியிடம் ஒப்படைத்தார். முதலாளி அதனை வாங்கித் திறந்து பார்த்தபோது அதிர்ச்சி அடைந்தார்!

சுளை சுளையாக ஐம்பதினாயிரம் ரூபா பணம் இருந்தது. மேலும் அலசிப் பார்த்தபோது, அந்தப் பையுள், சொந்தக்காரரின் பெயர் விலாசமும் இருந்தது!

முதலாளி, உடனடியாகத் தொடர்புகொண்டார். பணத்தின் சொந்தக்காரர் ஆவலுடன் வந்தார். தகுந்த அத்தாட்சிகளின் பின்னர் ஐம்பதினாயிரம் ரூபாவுடன் 'பேக்' மைமாறப்படும் நேரத்தில்.....

"இவர்தான் உங்கள் 'பேக்'கைக் கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்த கண்ணியமான நடத்துநர்....." என்று அறிமுகப்படுத்தினார் முதலாளி திரு. நிஸநாயக்கா.

"தாங்க் யூ" என்று மகிழ்ந்து சொல்லிவிட்டு நகர்ந்துவிட்டாராம் அந்த ஐம்பதினாயிரம் ரூபா 'கனவான்'!

— ஊடுருவி

எம். ஜி. ஆர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணாநிதி கூறினார்.

திருமதி இந்திராகாந்தி ஒரு வரசை மட்டுமே மத்தியில் நிலையான அரசை அமைக்கவும் இந்திய பொருளாதாரத்தை கட்டி எழுப்பவும் வெளிநாடுகளுடன் நல்லுறவை மேற்கொள்ளவும் முடியும் என்று நாம் நம்புகிறோம் இதன் அடிப்படையிலேயே நாம் இந்திரா காங்கிரஸுடன் தொடர்ந்து நல்லுறவைத் துவங்கினோம் என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

தி. மு. க தலைவரின் இந்த கட்சி ஆலுவலகம் ஆகிய ஆற்றை பொலிசார் சோதனையிட்டது ஜனநாயக மரபுகளை மீறுச் செயல் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கிளை கண்டனம் தெரிவித்துள்ளது. [இ]

இந்திய

நாட்டில் திடீர்ப் புரட்சியில் ஈடுபட்ட சுமார் 100 பேர் இராணுவத்தினரால் சுடப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடத்தல் சம்பவம் பற்றிய விபரம் இந்திய லோக சபையிலும் அறிவிக்கப்பட்டது. (இ)

ஹோம் பினன்ஸ்

லிமிட்.

உங்கள் வசதிக்காக சிறந்த பொருட்களை நாம் விற்பனை செய்கிறோம்

- Pedestal - மின்விசிறிகள் 16"
- Phoenix (CHINA) - சைக்கிள்கள்
- Home Mate (JAPAN) - மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும் மின்சார இயந்திரம்

மாதாமாத கட்டுப்பண முறையிலும் கொள்வனவு செய்யலாம்.

விபரங்கட்கு:

ஹோம் பினன்ஸ் லிமிட்,
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8310

மிகவும் குறைந்த
விசேட
விமான கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
தற்பொழுது
மக்கினன்ஸ் வழங்குகிறது

- சிங்கப்பூர்
- மத்தியகிழக்கு
- லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகள்

உலகின் எப்பாகத்துக்கும்

- கூடிய கழிவுடன் விரும்பிய விமானத்தில்

விமான டிக்கட்டுகள்

- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான எம்மிடம்

வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில் (TRAVELLERS CHEQUES)
பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியா விசா
நாடுங்கள்

மக்கினன்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்.

8, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்.

த. பெ. எண் 92 தொலைபேசி 8154

இப்பத்திரிகை யாழ்ப்பாணக் [illegible] மேற்கு [illegible] 68-ம் இலக்கத்திலுள்ள "சுதந்திரன்" [illegible] யாழ்ப்பாணம், [illegible] வீதி 303-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1981 [illegible] நவம்பர் 27-ம் திகதி [illegible] வெளியிடப்பட்டது. Registered as News Paper, The General P. O. Sri Lanka Regd.C. F. 10028e/81, P. O. Box 41. Jaffna. [தொலைபேசி 7707, 889, 8186.